**செய்தி வெளியீடு எண்:156** **நாள்: 23.02.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (23.2.2021) சென்னை, தீவுத்திடலில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகியவற்றின் சார்பில் 2,144 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டங்களை திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் சார்பில் 931 கோடியே 13 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தில் 36 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தாவரங்கள் நடவு செய்யும் பணிகளை துவக்கி வைத்தார்கள்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் அம்பத்தூரில் 95 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம்; பல்லாவரம் நகராட்சியில் 130 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்; பம்மல் நகராட்சியில் 43 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்; வடபெரும்பாக்கம் மற்றும் தீயம்பாக்கத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் வழங்கல் திட்டம்; ஆவடி – பருத்திப்பட்டில், 36 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறனுடைய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்;

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் அம்பத்தூர் ஆகிய மண்டலங்களில் உள்ள 48 வார்டுகளில் வீடுகள்தோறும் திடக்கழிவுகளை சேகரித்தல், கழிவுகளை சேகரித்து அதற்குரிய பதப்படுத்தும் நிலையங்களுக்கு கொண்டு செல்லுதல், எஞ்சிய கழிவுகளை குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சேர்த்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக M/s. Chennai Enviro Solutions Pvt. Ltd., என்ற நிறுவனத்திற்கு ஒரு வருடத்திற்கு 152 கோடி ரூபாய், என 8 ஆண்டு காலத்திற்கு 1,216 கோடி ரூபாய்க்கான பணிகளை மேற்கொள்வதற்கு ஆணை வழங்கப்பட்டு, தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் திட்டம்; சேத்துப்பட்டு, பழைய மத்திய தார் கலவை மையத்தில் 9 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 50 டன்

ஈரக்கழிவுகளை கொண்டு உயிரி எரிவாயு உற்பத்தி செய்யும் நிலையம்; கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில், 9 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 50 டன் அளவு வரை மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை எரியூட்டும் எரிகலன்; பெருங்குடி, நந்தம்பாக்கம், சேத்துப்பட்டு, சௌகார்பேட்டை மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் நாளொன்றுக்கு 400 மெட்ரிக் டன் அளவிற்கு தாவரக்கழிவுகள் மற்றும் தேங்காய் ஓட்டுக் கழிவுகளை பதனிடும் வகையில் 9 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பதனிடும் நிலையங்கள்; வேளச்சேரி–தாம்பரம் பிரதான சாலை, பள்ளிக்கரணையில், சிமெண்ட் ஆலைகளுக்கு எரிபொருளாக பயன்படுத்த நெகிழி கழிவுகளை சிப்பம் செய்து வழங்கிடும் வகையில் 1 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள பேலிங் இயந்திரம்; மாதவரம் மண்டலத்திலிருந்து தினசரி சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளைக் கொண்டு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம்; தி.நகர் – தியாகராய சாலை மற்றும் தணிகாச்சலம் சாலை சந்திப்பில் 40 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பல அடுக்கு தள தானியங்கி வாகன நிறுத்தம்; அமைந்தகரை, கலெக்ட்ரேட் காலனியில் 1 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம்; தேனாம்பேட்டை – குருபுரத்தில், 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீடற்றோருக்கான சிறப்பு காப்பகம்; மாதவரம்– வி.எஸ் மணி நகர், ஆயிரம் விளக்கு – ரட்லண்ட் கேட் 2வது தெரு மற்றும் வேளச்சேரி – ஜே.வி.நகர் ஆகிய இடங்களில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்காக்கள்; பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம் அமைந்துள்ள ரிப்பன் மாளிகையின் 2–வது தளத்தில் சென்னை சீர்மிகு நகர திட்டங்களை விரிச்சுவல் ரியாலிட்டி ஹெட்செட் மூலம் 5D கோணத்தில் சென்சாரின் உதவியுடன் காணும் வகையிலும், மேலும் புதிதாக செயல்படுத்தப்படவுள்ள / செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை பல்துறை வல்லுநர்கள் குழு முன்பாக செயல்முறை விளக்கம் அளித்திடும் வகையிலும் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு உணர்வு மையம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகராட்சிக்கு 87 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் பகிர்மான அமைப்பு அபிவிருத்தி திட்டம் (பகுதி –I); நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சிக்கு 81 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்; கோயம்புத்தூர் மாவட்டம், பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீர கேரளம் பகுதிகளுக்கு 32 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி

திட்டம்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் ஒன்றியத்தைச் சார்ந்த தேவிரப்பள்ளி மற்றும் 23 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி (பகுதி), கயத்தார் (பகுதி), ஒட்டப்பிடாரம் (பகுதி), விளாத்திகுளம் (பகுதி) மற்றும் புதூர் (பகுதி) ஒன்றியங்களிலுள்ள 248 குடியிருப்புகளுக்கு 94 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம்; கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் 38 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம்; நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சியில் 33 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம்;

நகராட்சி நிர்வாக ஆணையரகம் சார்பில், வேலூர் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அருகில் 11 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பல்லடுக்கு வாகனம் நிறுத்தம்; திருப்பூர் மாநகராட்சியில் 31 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 4.8 மெகா வாட் சோலார் மின்கலன் மற்றும் 13 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 2.0 மெகா வாட் சோலார் மின்கலன், 19 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எல்.இ.டி. தெரு விளக்குகள்; திருநெல்வேலி மாநகராட்சியில் 14 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பசுமை பூங்கா, இராமையன்பட்டியில் 13 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட உரக்கிடங்கு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், 29 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எல்.இ.டி. தெரு விளக்குகள்; தஞ்சாவூர் மாநகராட்சியில் 10 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்ட அய்யங்குளம் மற்றும் சாமந்தான் குளங்கள்;

பேரூராட்சிகளின் இயக்குநரகம் சார்பில், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தை வளாகம்; தருமபுரி மாவட்டம், கம்பைநல்லூர் பேரூராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தை; தருமபுரி மாவட்டம், பொ.மல்லாபுரம் பேரூராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தை; சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தை; ஈரோடு மாவட்டம், கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தை; ஈரோடு மாவட்டம், சென்னிமலை பேரூராட்சியில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தை; ஈரோடு மாவட்டம், நம்பியூர் பேரூராட்சியில் 4 கோடி 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நவீன பேருந்து நிலையம்;

என மொத்தம் 2144 கோடி 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு மாவட்டம், கோபி மற்றும் நம்பியூர் ஒன்றியங்களைச் சார்ந்த 6 கிராம ஊராட்சிகளிலுள்ள 96 குடியிருப்புகளுக்கு 56 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 குடியிருப்புகளுக்கு 412 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஒன்றியத்தைச் சார்ந்த 144 குடியிருப்புகளுக்கு 87 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருப்பனந்தாள், திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 குடியிருப்புகள் மற்றும் 2 பேரூராட்சி குடியிருப்புகளுக்கு 117 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தைச் சார்ந்த 31 குடியிருப்புகள் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியத்தைச் சார்ந்த 17 குடியிருப்புகள் மற்றும் 1 பேரூராட்சி குடியிருப்புக்கு 50 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்றம்பள்ளி ஒன்றியங்களைச் சார்ந்த 759 குடியிருப்புகளுக்கு 182 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

பேரூராட்சிகள் இயக்குநரகத்தின் சார்பாக திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சியில் உள்ள பேருந்து நிலையத்தில் 1 கோடியே 99 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தங்கும் விடுதியுடன் கூடிய வணிக வளாகம்; இராமநாதபுரம் மாவட்டம், கமுதி பேரூராட்சியில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள வாரச்சந்தை; இராமநாதபுரம் மாவட்டம், அபிராமம் பேரூராட்சியில் 1 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள வாரச்சந்தை; இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி பேரூராட்சியில் 1 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள வாரச்சந்தை; திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் 4 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள வாரச்சந்தை; திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள தினசரி சந்தை; தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பேரூராட்சியில் 79 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள வாரச்சந்தை; தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சியில் 1 கோடியே 24 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சந்தையடி தெருவில் மேம்படுத்தப்படவுள்ள வாரச்சந்தை; தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சியில் 3 கோடியே 95 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்

மேம்படுத்தப்படவுள்ள தினசரி சந்தை; தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சியில் 1 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள வாரச்சந்தை;

என மொத்தம் 931 கோடியே 13 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை சார்பில் ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு கூவம் நதியின் கரையோரங்களில் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிக்கும் வகையில், 108 உள்ளூர் தாவர இனங்களில், 4.53 லட்சம் தாவரங்கள் நடவு செய்ய திட்டமிடப்பட்டு அதில் புங்கை, நீர் மருது, இலுப்பை, வில்வம் ஆகிய மர வகைகளும், நீர்நொச்சி, குருவிபழம், ஆவாரம் போன்ற புதர் வகைகளும், பாம்புகலா, கற்பூரவல்லி போன்ற மூலிகைத் தாவரங்களும் நடவு செய்யப்படவுள்ளன. மேலும், பல்லுயிர் பெருக்கம் மற்றும் கடல்லோர நீர்வாழ் உயிரினங்களின் அடர்த்தியினை அதிகரிக்கவும், சதுப்புநிலம் மற்றும் அதன் வகைகளை சார்ந்த தாவரங்களை நடவு செய்யவும் 36 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூவம் நதிக்கரைகளில் ஆற்றங்கரை மற்றும் சதுப்பு நிலத் தாவரங்கள் நடவு செய்யும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

பொதுமக்களின் பணப் பரிவர்த்தனையை எளிமையாக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியும் ஐசிஐசிஐ வங்கியும் இணைந்து அறிமுகப்படுத்தும் "நம்ம சென்னை ஸ்மார்ட் கார்ட்" திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இந்த "நம்ம சென்னை ஸ்மார்ட் கார்ட்" மூலம் மாநகராட்சியின் சேவைகள், வாகன நிறுத்தக் கட்டணம், ஆன்லைன் பண பரிவர்த்தனைகள், உணவகங்கள், கடைகள் மற்றும் சில்லறை வணிகம் சார்ந்த இடங்களில் இக்கார்ட்டை பயன்படுத்தலாம். முதற்கட்டமாக, பொதுமக்கள் ரூ.100 செலுத்தி "நம்ம சென்னை ஸ்மார்ட் கார்ட்" பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமை அலுவலகம் மற்றும் கோடம்பாக்கம் மண்டல அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். படிப்படியாக அனைத்து மண்டல அலுவலகங்களிலும் இக்கார்டுகளை பெற்று கொள்ளும் வசதி செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர்

டாக்டர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் கே.பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ். பழனிச்சாமி, இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.டி.என்.ஹரிஹரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 23.2.2021**